விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 51 | ஐப்பசி - 2000 | பக்கங்கள் 12 | ஒளி 45

★ தென்மராட்சிப் பகுதியில்..........

# 2000ம் ஆண்டில் இடம்பெற்ற

# யுத்த அனர்த்தங்களினால் 136மில்லியன் ரூபாவை

# பல நோ. கூ. சங்கங்கள் இழந்துள்ளன!

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்.

இரண்டாயிரமாம் ஆண்டு காலப் பகுதியில் யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 136 மில்லியன் ரூபா பெறுமதியான இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சங்கங்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இழப்பீட்டு பட்டியலில் காணப்படும்விபரங்களை அடிப்படையாக வைத்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ, கு. சண்முகநாதன் மேலும் தகவல் தருகையில்; கூறியதாவது;

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கைதடி, சாவகச்சேரி, பச்சிலைப் பள்ளி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களே பெருமளவு சொத்துக்கள், பொருள் இழப்பு ஆகியவற்றில் கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த சொத்துக்களை இழந்துள்ளனர்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் சுமார் 11 கோடியே 17 லட்சம் ரூபாவையும், கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் ஒருகோடியே 18 லட்ச ரூபாவையும் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் ஒரு கோடியே 12லட்ச ரூபாவையும், யாழ்ப்பாணம் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் சுமார் 8 லட்சத்து 78 ஆயிரம் ரூபாவையும், கொடிகாமம் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் சுமார் ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும், மருதங்கேணி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் 6 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவையும் இழந்துள்ளதாகத் தெரிவித்தார்.

### தீபாவளி வாழ்த்து

அனைத்து கூட்டுறவாளர்களுக்கும், வாசகர்களுக்கும் ஐக்கிய தீபம் தனதுதீபாவளிநல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

### உள்ளே....

* பாதீட்டுக்கட்டுப்பாடு
* இலங்கை கூட்டுறவு வரலாறு
* வணிகக் கல்வி
* நோயின்றி வாழும் வழி
* தூய தொழில் நுட்ப
* பொது அறிவு

வலிகாமம் பகுதியில் ஏற்கனவே இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் அப்பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும் நூற்றுக் கணக்கான கோடி ரூபா பெறுமதிவாய்ந்த பொருள் இருப்பையும், கட்டிடப் பொருட்கள் போன்ற சொத்துக்களையும் இழந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பாதீட்டுக்கட்டுப்பாடு BUDGETARY CONTROL

ஒரு நிறுவனத்தின் வெற்றியானது அதன் செயல்பாடுகளை முறையாக திட்டமிட்டு அதற்கேற்ப அதனை செயல்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அநேகமாக நிறுவனங்களின் தோல்விக்கு எதிர்காலம் பற்றிய முன்னுணர்வுகளை மேற்கொண்டு தேவையான திட்டங்களை முறையாக வகுக்காமையும் வகுக்கப்படும் திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமையும் காரணங்களாக அமைகின்றன.

இந்த வகையிலேயே ஒரு நிறுவனத்தைப் பொறுத்த வரை திட்டமிடல் என்பது மிகமுக்கியமான ஒரு முகாமைத்துவக் கருமமாகக் கருதப்படுகின்றது. எனவே தான் பாதீடும், பாதீட்டுக் கட்டுப்பாடும் ஒருவகைத் திட்டமிடல் வடிவமாகக் கருதப்படுவதனால் இவ்விரண்டு செயல்முறைகளும் ஒருநிறுவனத்தைப் பொறுத்து அதிகூடிய முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்கின்றன சுருக்கமாகக் கூறின் திட்டமிடல் என்பது ஒரு நிறுவனத்தினை முன்னுணரப்பட்ட எதிர்காலத்தை நோக்கும் சரியான பாதை வழியே அழைத்துச் செல்லும் ஒரு வழிகாட்டி போன்று கருதப்பட முடியும். இந்த வகையில் பாதீடு தொடர்பான சில முக்கியமான விடயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

## பாதீடு - Budget

பாதீடு என்பது எதிர்காலம் தொடர்பாக முன்கூட்டியே மதிப்பீடு செய்யப்பட்டு கணிய வடிவில் வெளிப்படுத்தப்படும் ஒரு விபரமான திட்டத்தினைக்கருதும் அதாவது லண்டன் பட்டயக் கணக்கறிஞர் திறுவனத்தினால் (Institute of Chartered Accountants) பாதீடு என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது ' குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக குறித்த ஒரு காலப் பகுதியில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அக்காலப்பகுதிக்கு முன்னரே நிதிக் கணியவடிவில் தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்ட ஒரு முகாமைக் கொள்கைக் கூற்றே பாதீடு எனப்படுகின்றது. இது செலவுசார்ந்த அல்லது வருமானம் அல்லது மூலதனப் பாதீடாகவோ அமைய முடியும்.

இந்த வகையில் பாதீடு என்பது உற்பத்தி நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள்: அரசாங்க திணைக்களங்கள் போன்ற நிறுவன அமைப்புக்களால் ஒருகட்டுப்பாட்டு முறையாகக் (System of Control) கருதப்பட்டு தயாரிக்கப்பட்டு பின்பற்றி வருகின்றன.

### பாதீட்டின் நன்மைகள்

1 நிறுவனம் திட்டமிட்டு செயற்பட வழிவகுக்கின்றது
2. நிறுவனத்தின்எல்லா நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு முரண்பாடுகள் நீக்கப்பட்டு நிறுவன இலக்கினை அடைய வழிவகுக்கின்றது.
3. கட்டுப்படுத்தலை ஏற்படுத்துவதுடன் விளைவினை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.

**வ. வே. மணிமாறன்**
விரிவுரையாளர் பிரதேச கூட்டுறவு பயிற்சி நிறுவனம் யாழ்ப்பாணம்

4. எல்லா ஊழியர்களிடையேயும் தொடர்பினை ஏற்படுத்துவதுடன் ஊக்கத்தினை அளிக்கின்றது.

### பாதீட்டுக்குழு Budget committee

சிறிய நிறுவனங்களைப்பொறுத்த வரை பாதீட்டு உத்தியோகத்தர் அல்லது பிரதான கணக்காளரே பாதீட்டு தயாரிப்புக்கு என பொதுவாக பொறுப்பாக இருப்பர். ஆனால்பெரிய நிறுவனங்களைப் பொறுத்த வரை இந்நிலை சற்று வேறுபட்டது. பெரிய நிறுவனங்களைப் பொறுத்த வரை பாதீட்டு தயாரிப்புக்கு என தனியாக ஒரு பாதீட்டு குழு நியமிக்கப்படும். இப்பாதீட்டுக் குழுவில் நிறுவனத்தின் தலைமை உத்தியோகத்தர் பாதீட்டு உத்தியோக்தர் மற்றும் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளினதும் தலைவர்கள் அங்கம் வகிப்பர் இக்குழுவானது அதிகாரம் உடைய ஒரு குழுவாக அல்லது ஆலோசனை ரீதியிலான குழுவாகவே கருதப்படுகின்றது

### பாதீட்டுக்கைநூல் (Budget Manual)

பாதீட்டுக் கட்டுப்பாட்டில் காணத்தக்க ஒரு முக்கிய ஆவணத்தையே இது கருதுகின்றது. இக்கைநூலானது பொதுவில் பின்வரும் தகவல்களைக் கொண்டு இருக்கும்.

1) நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களினதும் பொறுப்புக்கள்.
2. செயற்பாடுகளைக் கொண்டு நடத்த வேண்டிய ஒழுங்குமுறை
3. நடவடிக்கைகள் தொடர்பாக தாம் எதிர்பார்க்கும் பதிவுகள்

பாதீட்டுத் தயாரிப்புக்கு என பொறுப்பாக இருக்கின்ற பாதீட்டுக் குழுவே இக் கைநூலையும்வடிவமைக்கிறது இக் கைநூலானது எழுத்துருவில் ஆக்கப்பட்டு நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுத்திணைக்கள தலைவர்களுக்கும் கையளிக்கப்படும் திட்டமிடலுக்கு மேலாக எதுவும் நடைபெறுவதனை தடுப்பதில் அல்லது குறைப்பதில் இக்கைநூலானது இத் தலைவர்களுக்கு பெரிதும் உதவும்.

### பாதீட்டின் வகைகள் Types of Budget

பாதீட்டினை பிரதான பாதீடு செயற் பாதீடுஎன இருவகைப்படுத்தலாம்.

### செயற்பாதீடு-Functional budget

நிறுவனத்தின் ஒவ்வொரு சிறு தொழிற்பாடுகளுக்காவும் தயாரிக்கப்படு பாதீடு செயற்படு பாதீடு அல்லது தொழிற்பாட்டுப் பாதீடு எனப்படும் இவ்வகையில் நிறுவனங்கள் பொதுவாகப் பின்வரும் பாதீடுகளைத் தயார் செய்து கொள்கின்றன. அவையாவனகாசுப் பாதீடு, விறபனைப் பாதீடு, கொள்வனவுப் பாதீடு, உற்பத்திப்பாதீடு, மூலப் பொருள் பாதீடு, விற்பனை விநியோக செலவுப்பாதீடு, பராமரிப்புக் கிரயப்பாதீடு, தொழிலாளர் பாதீடு, உற்பத்தி மேந்தலைப் பாதீடு, நிர்வாக மேந்தலைப் பாதீடு பொறிப் பாவனைப் பாதீடு, மூலதனச் செலவினப் பாதீடு ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினப் பாதீடு, என்பவற்றைத் தயாரிக்கப்படுகின்றது.

### பிரதானபாதீடு Master budget

ஒரு நிறுவனத்தின் ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்வது பிரதான பாதீடு ஆகும். செயற்பாடு பாதீடுகளின் விபரங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தயாரிக்கப்படும் திட்டமீடப்பட்ட இலாப நட்டக் கணக்கு ஐந்தொகை என்பனவாகும். இப்பாதீடுகளின் செயற்பாடுகளையும் உள்ளக விபரங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் இது பாதீட்டு அலுவலரினால் தயார் செய்யப்படுகின்றது'

(10ம் பக்கம் பார்க்க)

# இலங்கை கூட்டுறவு வரலாறு

## ஐக்கிய நாணய சங்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கை பதினைந்தாம் நூற்றாண்டு காலப் பகுதியில் இருந்து நீண்டகாலம் அன்னியர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தமை நாமெல்லோரும் அறிந்து கொண்ட விடயம்தான். இக்காலகட்டத்தில் இலங்கையின் பொருளாதாரம் பல்வேறு வகையான மாற்றங்களுக்கு உட்பட்டது. இவ்வாறான பொருளாதார மாற்றங்கள் தான் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் '' கூட்டுறவு '' தோற்றம் அடைவதற்கு காரணமாக அமைந்திருந்தன

இலங்கை அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் இலங்கையின் பாரம்பரிய பொருளாதார முறைமைகள் படிப்படியாக மாற்றமடையத் தொடங்கின. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரம்பரிய பொருளாதார முறைகள் முழுமையாக மாற்றம் அடைந்து வந்தமையால் இலங்கையில் வாழ்ந்து வந்த மக்கள் பலபொருளாதார பிரச்சனைகளுக்கும், சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

குறிப்பாக வருமானம் குறைந்த விவசாயிகள், தொழிலாளர், சிறு வியாபாரிகள், சிறுகைத்தொழிலாளர் போன்ற வகுப்பினர் தமது வாழ்க்கையினைக் கொண்டு நடாத்த முடியாது சிக்கல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் உள்ளாகி திண்டாடினர். குறிப்பாக ஆங்கிலேயர் வருகையின் பயனாக பெருந்தோட்ட பயிர்ச் செய்கை உருவானமை, பன்முக வர்த்தக நடவடிக்கைகள் தோற்றம் பெற்றமை என்பனவற்றால் ஏற்பட்ட மாற்றங்களே இத்தகைய பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட காரணமாக இருந்தன. முக்கியமாக வருவாய் குறைந்த வகுப்பினர் தொழில் வாய்ப்புக்களை இழந்து தமது வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாமல் திண்டாடினர்.

இத்தகைய மக்கள் ஏதாவது ஒரு தொழில் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதில் சிக்கலாக இருந்த பிரச்சனைகளில் மிகப்பிரதானமான பிரச்சனை மூலதனம் இன்மை ஆகும். மூலதனத்தைப் பெறுவதில் இருந்த கஷ்டம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தவர்களும் அதற்கான மிகக் கூடிய வட்டியை செலுத்த நிர்ப்பந்திக்கப் பட்டமை என்பன இம் மூலதனம் பெறுதல் தொடர்பான பாரியபிரச்சனைகளாகும்.

இந்த காலகட்டத்தில்தான் அதாவது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தகைய பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் அரசும், அரச அதிகாரிகளும் முயற்சிகளை ஆரம்பித்தனர். 1906ம் ஆண்டளவில் இம் மூலதன தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்குடன் இலங்கையில் பல்வேறு கிராமிய பகுதிகளில் மக்கள் தாமாகவே முன்வந்து குழுக்களாக செயற்பட ஆரம்பித்து இருந்தனர் இதற்கு சான்றுகளாக '' தும்பறை கடன் நிவர்த்தி சங்கம் போன்றவற்றை நாம் குறிப்பிட முடியும் '' இக்காலத்தில் தான் இலங்கையில் மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக கூட்டுறவு முறையில் சங்கங்கள் நிறுவப்பட வேண்டும் என முதன் முதலாக அரசுக்கு உத்தியோக பூர்வமாக தகவுரை செய்யப்பட்டது 1908ம் ஆண்டு பதுளை மாவட்ட அரசஅதிபராக இருந்த திரு. ஒ ஹென் மூர்த்தி மக்களின்கடன் பிரச்சனைக்கு நிவர்த்தியாக கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் நாடுமுழுவதும் பரவலாக அமைக்கப்பட வேண்டுமென தகவுரை செய்திருந்தார். அப்போதிருந்த பிரித்தானிய ஆள்பதி சேர் ஹென்றி பிளேக் அவர்கள் திரு. மூர்த்தி அவர்களின் தகவுரை தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. அவருக்கு பின்வந்த பிரித்தானிய ஆள்பதியான சேர் ஹென்றி மக்கலம் அவர்கள் திரு மூர்த்தியின் தகவுரைகளைக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுக்கமுற்பட்டார், சேர் ஹென்றி மக்கலம் அவர்கள் குறிப்பாக கிராமப்புற மக்களின் பிரச்சனைகளை அணுகிஆராயமுற்பட்டார். விவசாயிகளுக்கு கடன் வழங்கவென ஒருதொகை நிதி ஒதுக்கீட்டினையும் வழங்கி விவசாயவங்கி தொழில்குழு என்ற குழுவையும் நியமித்தார்.

'' விவசாய வங்கித் தொழில் குழு '' வானது பாரம்பரிய கிராமியத்துறை கடன் வழங்கலில் நிலவிய கடன் சுமைகளின் தீவிரத்தன்மைகள் மற்றும் இடர்கள் என்பன சுட்டிக் காட்டப்பட்ட அறிக்கை ஒன்றினை 1910ம் ஆண்டு வெளியிட்டது. இவ் அறிக்கையே '' இலங்கைக் கூட்டுறவு இயக்கம் '' பற்றி மிக முக்கியம் வாய்ந்த முதல் ஆவணம் ஆகும்.

மேற்படி '' விவசாய வங்கித் தொழில் குழு '' வழங்கிய பரிந்துரைக்கு அமைய கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கும் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு கட்டளைச் சட்டம் 1911ம் ஆண்டு மே மாதம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது: இதுவே இலங்கையில் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான முதலாவது கட்டளைச் சட்டம்ஆகும் இச்சட்டம் 1911ம் ஆண்டின் 07ம் இலக்க ஐக்கிய நாணய சங்கங்கள் கட்டளைச் சட்டம் என அழைக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரகாரம் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாகி சட்டரீதியாக பதிவு செய்யப் பெற்று இயங்குவதற்கு வழி செய்யப்பட்டது:

---

**வீ. கே. சிவராஜசுந்தரம்**
கல்விபயிற்சியாளிப்பு அலுவலர்
யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை.

---

இதன் அடிப்படையில் முதலாவது ஐக்கிய நாணயசங்கம் தென் மாகாணத்தில் உள்ள மாத்தறை மாவட்டத்தின் 'வெல்லபொடபத்து' என்னும்கிராமத்தில் உருவாக்கப்பட்டு 1912ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இலங்கையிலே முதன்முதலில் பதிவு செய்யப்பட்ட மேற்படி ஐக்கிய நாணயசங்கம் ''மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடையது'' ஆகும் சங்கத்தின் படுகடன்களுக்கு சங்க அங்கத்தவர்கள் தனித்தும் ஒருமித்தும் முழுத்தொகைக்கும் பொறுப்புடையவர்கள் ஆகின்றனர்.

இக் காலத்தில் இருந்து இலங்கையின் பல பாகங்களிலும் இவ் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு இயங்கத் தொடங்கின வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய ஐக்கிய நாணய சங்கங்கள் நகர்புறங்களிலும் வரையறுக்கப்படாத பொறுப்புடைய ஐக்கிய நாணய சங்கங்கள் கிராமிய பகுதிகளிலும் செயற்பட ஆரம்பித்தன

எமது யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 1916ம் ஆண்டு சரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாவது ஐக்கிய

( 11 ம் பக்கம் பார்க்க )

# வணிகக் கல்வி

வினாவிடைத் தொடர் 3

1. நிதிச்சந்தையை வரையறுத்து அதன் பொருளாதார முக்கியத்துவத்தை கூறுக ?

ஒரு பொருளாதாரத்தின் நிதிக்கேற்றவாறு நிதி நிரம்பலை மேற்கொள்ளும் சந்தை அமைப்பை நிதிச் சந்தை எனலாம். அதாவது குறுங்கால கடன் வழங்குனர்கள் பெறுனர்கள், நீண்டகால கடன் வழங்குனர்கள் பெறுனர்கள் என்போரை உள்ளடக்கிய சந்தை அமைப்பே நிதிச்சந்தை எனப்படும்.

i குறித்த பொருளாதாரத்தின் முதலீட்டு பற்றாக்குறையை குறைத்தல்.

ii தொழிற்சாலைகளை பெருக்கி கைத்தொழிலை வளர்த்தல்

iii அந்நிய முதலீட்டாளர்களை நம்பிக்கை கொள்ள செய்து கவர்தல் போன்று பல்வகைகளில் பொருளாதாரத்துக்கு உதவுவதால் இது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

2. பணச்சந்தை • மூலதன சந்தை வேறுபடுத்துக ?

குறுகிய கால அடிப்படையில் கடன் வழங்குனர்களையும், கடன் பெறுனர்களையும் உள்ளடக்கிய சந்தையாக பணச்சந்தை காணப்படுகிறது. இது வணிக வங்கிகள் நிதி கம்பனிகள், கழிவீட்டகங்கள், அடகு பிடிப்போர், வட்டிக்கு கொடுப்போர், சீட்டுப் பிடிப்போர், கிராமிய வங்கிகள், உண்டியல் தரகர்கள், ஐக்கிய நாணய சங்கம், போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும் பணச்சந்தை கருவிகளாக திறைசேரி உண்டியல்கள் (குறுங்கால முதிர்வுடையன) வைப்பு சான்றிதழ், வரிஒதுக்கல் சான்றிதழ், சேமிப்பு சான்றிதழ் மத்திய வங்கியில் குறுங்கால பிணைப்பத்திரங்கள் என்பன உள்ளன.

மாறாக நடுத்தர நீண்டகால அடிப்படைகளில் உற்பத்தி, வியாபார முயற்சிகளுக்கு கடன்களை வழங்குபவர்களையும், பெறுனர்களையும் உள்ளடக்கியதான சந்தையாக மூலதன சந்தை காணப்படுகிறது, இது பங்குச்சந்தை, அலகு பொறுப்பாட்சி நிறுவனங்கள் சேமிப்பு நிலையங்கள், அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் குத்தகை கம்பனி, கட்டட சங்கங்கள் நிதி கம்பனிகள், வியாபார கம்பனிகள், துணிகர தொழில் முயற்சி மூலதன கம்பனிகள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும் மூலதன சந்தை கருவிகளாக தொகுதி கடன் பத்திரங்கள், நீண்டகால திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், வைப்புச் சான்றிதழ்கள், வணிகதாள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

3. பணச்சந்தையின் பிரிவுகளை குறிப்பிட்டு விளக்குக ?

i வங்கிகளுக்கிடையான அழைப்பு கடன் சந்தை

ii உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தை

iii திறைசேரி உண்டியல் சந்தை

iv கரை கடந்த வங்கிச் சந்தை

v அரச பிணைகளுக்கான மறு கொள்வனவு சந்தை

i வங்கிகளுக்கிடையான அழைப்புக் கடன் சந்தை : குறுங்கால திரவ மிகையில் உள்ள வங்கி குறுங்கால திரவ பற்றாக்குறையைக் எதிர்நோக்கும் வங்கிக்கு 7 நாட்களுக்குட்பட்ட அடிப்படையில் கடன் வழங்கும் முறையாக இது அமைகிறது. கடன் வழங்கிய வங்கி கேட்டவுடன் கடன் பெற்றவங்கி திருப்பிசெலுத்த வேண்டிய நிலையில் இருப்பதால் இது அழைப்புக்கடன் சந்தை எனப்படுகிறது. இதற்காக அறவிடப்படும் வட்டி விகிதம் அழைப்பு கடன் விகிதம் எனப்படும்.

வே மணிவதனன்
வர்த்தக ஆசிரியர்

ii உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தை : உள்நாட்டில், அந்நிய நாட்டு சட்ட ரீதியான செலாவணிகளின் அடிப்படையில் வைப்புகள் திரட்டப்பட்டு பணக்கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது உருவாக்கப்படும் சந்தையே உள்ளூர் அந்நிய செலாவணி சந்தையாகும் இது NRFC க/கு, RFC க/கு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலமும் செயற்படுகின்றது.

iii திறைசேரி உண்டியல் சந்தை : அரசு தனது செலவினங்களிற்கான பணத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வெளியிட்டு கொள்ளும் கடன் வாக்குறுதிப் பத்திரங்களான திறைசேரி உண்டியல்களை பொது மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கின்றபோது ஏற்படும் சந்தையே திறைசேரி உண்டியல் சந்தை எனப்படும் இவ்வாறு வெளியிடப்பட்ட உண்டியல்களை மத்திய வங்கி கொள்வனவு செய்யும் போது ஏற்படும் சந்தை திறைசேரி உண்டியலுக்கான 1ம் தர சந்தை எனப்படும். மத்திய வங்கி தான் கொள்வனவு செய்த உண்டியல்களை பொது மக்களுக்கும், வணிகவங்கிகளுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் விற்கும் போது ஏற்படும் சந்தையே திறைசேரி உண்டியலுக்கான 2ம் தர சந்தை எனப்படும். உண்டியலை கொள்வனவு செய்தவர்கள் நிதி நெருக்கடி ஏற்படும் போது விற்றுப்பணமாக்குவதற்காக 1993ல் மத்திய வங்கியால் உருவாக்கப்பட்ட சந்தையாக திறைசேரி உண்டியலுக்கான மீள் கொள்வனவு சநதையும் காணப்படுகிறது.

iv கரைகடந்த வங்கிச் சந்தை : வெளிநாட்டுக்கு சொந்தமான வங்கியொன்று உள்நாட்டில் கிளைகளை நிறுவி அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் போது ஏற்படும் சந்தை இதுவாகும். இச்சந்தையை இலகுபடுத்துவதற்காக உள்நாட்டு வணிக வங்கிகளில் அந்நிய நாணய வங்கி அலகு (FCBU உருவாக்கப்பட்டுள்ளது

v அரச பிணைகளுக்கான மறுகொள்வனவுச் சந்தை : அரச ஆவணங்கள் பிணைகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பர்கள் இடைக்காலத்தில் நிதிநெருக்கடி ஏற்படும்போது பணமாக மாற்றிக் கொள்வதற்காக 1988ல் உருவாக்கப்பட்ட சந்தையாக இது காணப்படுகிறது. இது அரச பிணைகளின் திரவதன்மையை அதிகரிக்கவும், பணபாய்ச்சலை அதிகரிக்கும், நோக்குடனும் உருவாக்கப்பட்டதாகும்.

4 முதனிலை வணிகர்கள்என்பவர்கள் யார்? இவர்களால் முதலீட்டாளர் பொருளாதாரம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை குறிப்பிடுக?

மத்திய வங்கியிடமிருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய என மத்தியவங்கியினால் நியமிக்கப்பட்ட நிறுவனங்களே முதனிலை வணிகர்களாவர்.

பொருளாதாரம் பெறும் நன்மைகள்

* மத்திய வங்கியின் நிதிப் பொறுப்பு குறைக்கபடும்
* எல்லாரும் முதலீடு செய்ய வழி வகுப்பதால் வருமானம் கூடி வருமான ஏற்றதாழ்வு குறையும்
* அரசு இலகுவில் நிதியை திரட்டிக் கொள்ளும்
* பொதுமக்களின் பணம் அரசிடம் செல்வதால் பணவீக்கம் கட்டுப் படுத்தப்படும்

(வளரும்)

# நோயின்றி வாழும் வழி

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ! என்ற பழமொழியின்படி வாழ்ந்தோமானால் அளவற்ற செல்வத்தைப் பெற்றவர்கள் ஆகின்றோம். நோயின்றிவாழும் வழியை இதன் மூலம் அறிவோம்.

மனிதர்களுக்கு நோய்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து வருகிறது விஞ்ஞான உலகம் ஆனால் மனிதர்களுக்கு மட்டும் ஏன் நோய்கள் வருகின்றன என்பதை மெய்ஞானத்தால் மட்டுமே அறிய முடியும். அதாவது மனித இனத்தைத் தவிர தன்னிச்சையாகச் சுதந்திரமாகத் திரியும் ஜீவராசிகள் முதுமையையும் அடைவதில்லை; நோயுற்று மற்றவைகளின் உதவியையும் நாடுவதில்லை என்பதுஎல்லோருக்கும் தெரிந்தவிஷயமேயாகும். மேலும் விலங்கினங்களும் பறவை இனங்களும் முதுமையடைந்து மூக்குக்கண்ணாடி போட்டதாகவும் தெரியவில்லை; ஊன்றுகோல் உதவியைக் கொண்டு அலைந்ததாகவும் தெரியவில்லை: எதிர்காலத்திற்காக (தேனீ எறும்பு. தவிர) உணவு வகைகளைச் சேமித்து வைத்ததாகவும் அறியவில்லை. இதற்கு எல்லாம் மூலகாரணத்தை ஆராய்கின்ற போது முதற்படியாக நாம்புரிந்துகொள்வது:

**சுகவனம்**

அவைகள் எந்தவித நோய்களினாலும் தாக்கப்படுவதில்லை என்பதாகும். மனிதர்களுக்குக்கட்டுப்படாத விலங்கினங்கள், பறவை இனங்களுக்கு ஏன் நோய்கள் வருவதில்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்கின்ற போது ஓர் உண்மை நமக்குப் புலப்படுகின்றது அதாவது அவைகள் உட்கொள்ள வேண்டிய ஐந்து சுவைகளான காரம் கசப்பு. இனிப்பு. புளிப்பு. துவர்ப்பு ஆகிய உருசிகளுக்குரிய உணவுப் பொருட்களை (காய், கனி, தழை, இறைச்சி, தானியங்கள்) உட்கொள்கின்றன

ஆனால் மனிதர்கள் முறைப்படி உண்ண வேண்டிய அறுசுவை உணவில் 'கசப்பு' சுவைக்குரியவைகளை மறந்து நீக்கி, மீதமுள்ள காரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு ஆகிய ஐந்து சுவைகளுக்குரிய உணவு வகைகளையே உண்கின்றனர், ஆக ஓர் உருசிஉணவில் குறைந்துவிடுகின்றதல்லவா? இதன் காரணமாக மனித உடலில் நோய்க்கிருமிகள் அழியாமல் பெருகிப் பலதரப்பட்டநோய்கள் ஏற்பட்டு விரைவில் மடியும் வாய்ப்பு உண்டாகின்றது அல்லவா ?

இதன் காரணமாக மனிதர்கள் தம் மீது தன் நம்பிக்கை இழந்து எதிர்கால இயலாமைக்காக ஏராளமான பொருட்களைச் சேமித்து வைக்கின்றனர் அல்லவா ?

ஆனால் 'கசப்பு' சுவைக்குரிய அகத்திக்கீரை, பாகற்காய், சுண்டைக்காய், வேப்பம் பூ போன்றவைகளில் ஏதேனும் ஒன்றை அனுதினமும் உணவில் கலந்து உட்கொண்டு வந்தால் நோய்க்கிருமிகள்உற்பத்தியாகாமலும் எதிர்காலத்தில் மட்டுமின்றி எப்போதும் இயலாமையின்றி இறுதிவரை நோயின்றி முழு சக்தியுடன் வாழ முடியும் என்பதை அனுபவத்தில் அறியலாம்.

ஒரு மனிதன் முழு அறிவு எப்போது பெற முடியும் ? ஆறுவகை 'உ' ருசியினைக்கொண்ட உணவினை அதாவது 'அறுஉ' ருசிகளைச் சாப்பிட்டு வருவதால் உடலும் உள்ளமும் முழு வளர்ச்சியடைந்து, 'அறிவு' என்னும் அறிந்து கொள்ளும் உணர்வினை (நற்சிந்தனை) அடைந்து நலமுடன் வாழலாம். இதற்கு மூலகாரணமான முதுமொழியை நாம் இன்றும் நம்மை அறியாமலே கூறிக்கொண்டு வருகின்றோமல்லவா ? அதாவது சில தவறு செய்பவர்களைப் பார்த்து அடிக்கடி கேட்கும் கேள்வி :

'நீ வயிற்றுக்கு என்ன சாப்பிட்டாய் ! அறிவு இல்லையா உனக்கு' என்ற கேள்வி ஆகும்: இதன் உட்பொருளை ஆராய்ந்து பார்க்கின்ற போது, "அறிவு இல்லையா !" என்பது அறுவகை 'உ' ருசிக்குரிய உணவு (அறிவு அறுஉ) வகை வீட்டில் இல்லையா என்பதே ஆகும். ஆக அறுவகை உருசி உணவினை உட்கொண்டு வருவதாலேயே பூரண உடல் நலமும் அறிவும் ஆற்றலும் (ஆறால் கிடைப்பது) அடைந்து எதிர் கால பயமின்றி இனிதே வாழ முடியும் என்பதை உறுதியாக அறியலாம்.

எதிர்காலத்தில் அறிவு பெற்று 'தெளிவு' அடைந்து ஒன்றுபட்டு உயர்வடைவோமாக ! உண்மை கசப்பில் தான் உள்ளது. உதாரணம் : "உண்மையைச் சொன்னால் கசக்கிறதா" என்பது பழமொழிதானே !

அனைத்துத் துன்பங்களுக்கும்அறியாமை தான் மூலகாரணம் என விவேகானந்தர் கூறியுள்ளார் ஆகவே மேற்கூறிய "அறுசுவை உணவால்" அறிவு பெறுவோமானால், கதிரவனைக் கண்ட இருளைப் போல், அறியாமை எனும் இருள் அகன்று அனைத்துத் துன்பங்களும் மறைந்துவிடுமல்லவா ? மேலும் நோயின்றி வாழ்ந்து குறைவற்ற செல்வத்தை அடைந்து நீடுழி வாழ்வோமாக !

## மகாத்மா வாழ்வில் ஒரு நாள்

"சேவா கிராமம்" அண்ணல் காந்தியின் தலைமையில் ஒரே குடும்பமாக இணைந்து வாழ்ந்து வந்தது.

"காலம்" என்பது அங்கு கண்டிப்பாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவது வழக்கம். காலந்தவறுதல் என்பது அங்கு பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. சேவா கிராமத்தில்மதிய உணவு சரியாக நண்பகல் 12 - 00 மணிக்குப் பரிமாறப்படுவது வழக்கம்.

அனைவரும் 12 - 05 க்குள் சரியாக வந்து பந்தியில் அமர்ந்து விடவேண்டும். இல்லாவிடில் தாமதத்திற்கான காரணங்காட்டி அடுத்த பந்தியில் இருந்து உண்ண வேண்டும். ஒரு நாள் மகாத்மா காந்தியே ஒரு நிமிடம் தாமதித்து வந்து விட்டார்.

காலம் தவறக் கூடாது என்ற கருத்துடன் அவர் அவசர அவசரமாக வந்தும் முதல் பந்தி தொடங்கி விட்டது அதற்கு அறிகுறியாக மந்திர ஒலி கேட்டது அதனால் வாசலிலே நின்று விட்டார்.

'பரவாயில்லை உள்ளே வாருங்கள். உங்கள் இடம் காலியாக இருக்கிறது" என்று பலர் அழைத்தும் அவர் போகவில்லை

எனது தாமதத்திற்கான தண்டனை எனக்கு வேண்டும் அடுத்த பந்தி ஆரம்பிக்கும் வரை இங்கேயே நிற்கிறேன் என்று கூறினார். அடுத்த பந்தி தொடங்கும் வரை உட்கார நாற்காலி போட்டும் அவர் உட்காரவில்லை. தவறுக்குரிய தண்டனை அனுபவிப்பவருக்கு அத்துணை மரியாதை அவசியமில்லை என்று மறுத்துவிட்டார் காந்தி.

# தூய தொழில் நுட்ப அடிப்படைத் தத்துவங்கள்
## Basic Principles of Clean Technology

தொழில் நுட்பம் என்ற பதத்திற்கு ''புதிய முறை'' என்ற கருத்தே விளக்கமாக்க கொள்ளப்படுகிறது எனவே தூய தொழில் நுட்பம் என்ற விடத்து மேலும் ஒரு விசேட இயல்புடன் இப்பதம் மிளிர்கின்றது. தூய தொழில் நுட்பம் என்பது குறைந்த சூழல் மாசுகளை ஏற்படுத்தக் கூடியவாறு அமையும் சிறந்த உற்பத்திமுறைகள் ஆகும். (Clean Technology has Been defined as integrating environmental constraints in the Production process in order to Produce better and reduce pollution ) தூய தொழில் நுட்பமானது சூழல்காரணிகளோடு இணைந்து போவதனால் தற்போதைய காலகட்டத்தில் இது மிகவும் முக்கியத்துவப் படுகிறது.

மனிதன் சிறப்புடைய உயர்வான தரமான வாழ்க்கை மட்டத்தை எதிர்பார்ப்பதனால் அதற்கு ஒப்ப ஆடம்பர சொகுசான வேலைப்பழு அற்ற சூழலை உருவாக்க விரைவான கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு அவசியம் தேவை. இத் தேவை 2000 ஆண்டளவில் மிகவும் உயர்வான நிலையை அடைந்துவிட்டது. அதிகரித்த தேவை மென்மேலும் உயரும் அறிகுறி இருப்பதனால் கைத்தொழில் வளர்ச்சி சூழலைப்பாதிக்காவண்ணம் புதுவகையான தொழில் நுட்பத்தினைக் கண்டு சூழல் தாக்கம் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

சூழல் மாசுபாடு எனக் கருதுமிடத்து அதனை தெளிவு படுத்த வேண்டிய அவசியம் உண்டு.

1 ஒலி மாசு
2. மாசுபட்ட காற்றின் வெளியேற்றம்
3 ஊறுவிளைவிக்கும் பொருட்களை நீரில் சேர்த்தல்
4. துன்புறுத்தக்கூடிய கூடாத மணம் வெளியேறல்
5. தூசு படிந்த காற்று
6 திண்மக் கழிவுகள் உருவாதல்.

கைத்தொழில் விருத்தியைத் தொடர்ந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் காற்றினை மாசுபடுத்தாது பாதுகாத்து பரிகரணம் செய்யப்படவேண்டும். இங்கு வெளிவரு இழப்புக்களைக் கொடுக்கக்கூடிய மாசுகள் (Polluranrs) வாயு வடிவில் இருப்பது ஆபத்தானது. அளவிடுதலும் கடினமானது. அவையாவன.

1. கந்தகவிரொட்சைட்டு ($SO_2$)
2. காபனோரொட்சைட்டு (CO)
3. ஓசோன் ($O_3$)
4. நைதரசனின் ஒட்சைட்டுக்கள் ($NO_x$)
5. காற்றில் தொங்கலான பதார்த்தங்கள் (SPM (Suspended Particulore Matters)

இவ் வாயுக்களின் சேர்க்கையால் ''சூழல் தரக்குறைவு'' ஏற்படும் சந்தர்ப்பம் தோன்றுகிறது. இதனைக் கட்டுப்படுத்த 1989ல் M Roustan என்பவர் தூய தொழில்நுட்பம் (Clean Technologyct)என்றபதத்தை அறிமுகம் செய்தார். இது குறிப்பாக பொறியியலாளர்களின் இயந்திர வடிவமைப்புக்களின் அடிப்படைக்கருவாக இருப்பதனால் இது பற்றிய பல எண்ணிக்கையான தரம் வாய்ந்த கட்டுரைகள் As an Instutite of Techno - logy, Ait Bangkok, இல் இருந்து வெளிவிடப்படுகிறது.

அபிவிருத்தியின் ஆரம்பகர்த்தாக்கள் எனக் குறிப்பிடப்படும் பொறியியலாளர்கள் காட்டை நாடாக்கும் வல்லமை கொண்டவர்கள் நில அளவையில் ஆரம்பமாகும் காடழிப்பு சூழலைப் பாதிக்கும் பெரும் காரணிகளாகும் இவற்றிற்கு இங்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்க முடியாது உருவாக்கப்பட்ட இயந்திரங்களின் துணையுடன் உற்பத்திகள் மேற்கொள்ளும் பொழுதுகழிவுகள்சூழலைப்பாதிக்காது இயந்திரங்களின் தகுதிகளைஎவ்வாறு உயர்த்தலாம் என்ற வழி முறையோடு தொடர்புடையதே தூய தொழில் நுட்பம். இதனை சாதாரண மக்களால் விளங்கி சூழலைப் பேணு மன இயல்பை விருத்தி செய்வதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும். தூய தொழில்நுட்பம், கொள்கை திட்டமிடல் அணுகுமுறை, தொழில் நுட்ப அணுகுமுறை முகாமைத்துவ முறைகள் நிர்வாக செயற்பாடுகள் என்ற தலைப்பில் முக்கிய கருத்துக்கள் இங்கு இடம்பெறும்

### தூய தொழில் நுட்பம்

சூழலியாளாளர்களால் இப்பதம் பல வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

1. குறைந்த கழிவு தொழில் நுட்பம்
2. கழிவற்ற தொழில் நுட்பம்
3. மாசுபடலைத் தடுத்தல்
4. கழிவைக் குறைத்தல்
5. வளங்களை மீளளிப்புச் செய்தல்
6. வளங்களை சிக்கனமாக பாவித்தல்
7. வளங்களை விகித முறைப்படி உபயோகமாக்கல்.

மேற்கூறிய பல வகைப்பட்ட பதங்களும் சூழல் தாக்கம் இல்லாத ஒரு நிலையை தோற்றுவிக்கும் நோக்குடன் கூறப்பட்டவை. இருந்தும் இயந்திரங்களுடன் நேரடித் தொடர்பு படுத்தி அவைகள் கையாளப்படாது எழுந்தமானமான கருத்துக்களை விளக்குவதாக அமைவதுநடைமுறைச் சாத்தியக்கூறாக முடியுமா? என்ற வினா எழ இடமுண்டு.

பொ. ஆழ்வாப்பிள்ளை
தலைவர் விவசாய பொறியியற்துறை
விவசாயபீடம்யாழ் பல்கலைக்கழகம்

இன்றைய யுத்த சூழலில் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்துக்கள் அவசியமா? இதற்காக ஒரு தனித் திணைக்களம் தேவையா? இதற்கு ஒரு அலோசனை சபை அல்லது மந்திரி சபைஉருவாக்கப்பட வேண்டுமா? அதிகாலை அதிர்வு வேட்டுக்கள் கற்காலத்தை நினைவுபடுத்துவதாகத் தான் இருக்கிறது இந்த சூழலில் மாணவர்களுக்கு சூழல் கற்கைநெறி என்பது கேள்விக்குரிய நிலைப்பாடே?

சூழலுக்கான செலவுகள் அதிகரித்துச் செல்வது கேலிக்கிடமானபின் விளைவுகளைத்தோற்றுவிக்காதா என நாம் நாம் ஆராயவேண்டும். எனவே பயன் படும் இயந்திரங்களின் சீரான உபயோகம் அடிப்படையான சூழல் மாசுபடலை நிவர்த்தியாக்கும் வண்ணம் அமைதல் வேண்டும். அதாவது மாசற்ற நிலைப்பாடு தோன்ற மூன்று வழிகள் உண்டு.

(1) இருக்கும் உற்பத்தி முறைகளை சிறந்தநிலைக்குத் தள்ளிவிடல் (Ophmigarion of the exisring process)

-->

## தூய தொழில்நுட்ப...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

(2) உற்பத்தி முறைகளை நவீனப் படுத்தல் (Modificarion of process)

(3) உற்பத்தி முறைகளை மாற்றி அமைத்தல் (Changing the process)

ஒரு உற்பத்தி முறையை அதி நுணுக்கமாக அறிந்து அதன்வினைத் திறனான நிலையை அடைய முயற்சிக்கும் பொழுது கழிவுகளை கட்டுப்படுத்தி ஒருசீரான முறையை எல்லா உற்பத்தி நிறுவனங்களும் மேற்கொண்டு அபிவிருத்தியை முன்னெடுத்தல் வேண்டும். இதனை ''சிறப்பு நிலை'' (Oprimization) எனலாம். விளை பொருட்களுடன் தொடர்புடையதே ''நவீனப்படுத்தல்'' என்பதாகும். கழிவுகளை மேலும் பயன்படுத்தும்உபகரணங்களைச் சேர்த்துக் கொள்ளலும், திரவ - திண்ம கழிவுகளை மேலும் பயன் படுத்துவதற்குரிய இயந்திரப் பகுதிகளை வடிவமைத்தலும் நுண்மூலகங்களின் கழிவுகளைத் திருப்பிப் பெறுவதற்கான இரசாயண பகுப்புக்களை மேற்கொள்ளலும் ''நவீனப் படுத்தல்'' எனலாம். இதற்கு சிறந்த தொழிநுட்ப அறிவு தேவைப்படுவதுடன் இயந்திர வடிவமைப்புத் திறனும் பெரிதும் வேண்டப்படற் பாலதே

எமது தற்போதைய சூழலில் எல்லா தொழிநுட்ப உத்தியோகத்தர்களும் பாதுகாப்புநாடி வெளியேற இருப்பதும், வெளியேறி பிற நாடுகளில் வாழ்வதும், உள்ளூர் தகுதி வாய்ந்த தொழில்நுட்பவல்லுனர்கள் அருகிவருவதனாலும் தொழில்முறைகளை விருத்திசெய்யும் போக்கில் கட்டுப்பாடு அற்று இருப்பதும் எமது பிரதேச அபிவிருத்தியை பின்தள்ளிச் செல்கிறது. அழித்தலும் ஆக்கலும் சேரவருவதே ஒருவகையில் அபிவிருத்தி எனக்கொள்ளவேண்டும் (Destruc rion and construction)

உற்பத்தி முறைகளை மாற்றி அமைத்து இலகுவாக்கப் படுவதால் இலாபவீதம் குறைந்து கைவிடப்படும் தொழிலாக அமைவதும் தவிர்க்கமுடியாத நிலையே எனவே தூய தொழிநுட்பத்துக்கு யார் பொறுப்பு? யாருக்கு தூயதொழில்நுட்பம் அவசியம்? யார் தூய்மையான பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும் எனச்சிந்திக்கின்றார்? எங்கே தூய தொழில் நுட்பம் உருவாக்கப்பட வேண்டும் என பல கேள்விகளைக் கேட்கப்படும் பொழுது முக்கியமான தொழில்நுட்பக்கூறு எது என்றுஅறிய வேண்டியதாகவுள்ளது.

உள்ளீடு
மனிதவளம் → வெளியீடு + திண்ம திரவ கழிவுகள்
சக்தி

தூயதொழில் நுட்பத்தினால் எமக்குக் கிடைக்கும் பயன் யாது?

1. சூழல் பாதுகாப்பு
2. தொழிற்களத்தின் சிறந்த நிலை
3. சக்தி, மூலப்பொருட்கள் சிக்கனப்படல்
4. வெளியீடுகளின் தரம் பேணப்படல்
5. உற்பத்தியும், இலாப அளவும் அதிகரித்தல்
6. அழிவுச் செலவைக் கட்டுப்படுத்தல்

இவ்வகையான பலவகைப்பட்ட நன்மைகளை தூயதொழில் நுட்பம் கொண்டிருப்பதனால் அது பற்றிய அறிவு எமது மக்களுக்கு இன்றியமையாதது. இதனால் இயந்திர சூழல் (Mechinery Environment) தோன்ற வாய்ப்புண்டு.

கொள்கை திட்டமிடல்

உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தூயதொழில் நுட்பம் பல நாடுகளில்பயன்படுத்தப்படுகிறது அரசாங்கக் கொள்கைகளில் திருத்தம் செய்யப்பட்டு தூயதொழில் நுட்பம் உட்புகுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் 1980ல் கொண்டுவரப்பட்ட சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மேலும் திருத்தப்பட்டு தூய தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது நெதர்லாந்தில் 1988ல் கொண்டுவரப்பட்ட தேசிய சூழல் கொள்கைத் திட்டம் தூயதொழில்நுட்பத்தின் முன்னோடியாகவுள்ளது:

பிரான்சு நாட்டில் பொருளாதார கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு தூயதொழில் நுட்பம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் தூயதொழில்நுட்பத்துடன் சேர்ந்த EPA, PPO, PPIC போன்ற துணைக்கிளைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

EPA - The US Environmental Protection Agency

PPO - Pollution Prevention Office.

PPIC - Pollution Precaustion Information Cleaning House.

இங்கிலாந்தில் "BATNEEC" என்ற "Royal Commission" உம் கனடாவில் "FEARO" என்ற நிறுவனமும் தூயதொழில் நுட்பத்தினை நேரடியாக நடைமுறைப் படுத்தலில் பங்களிக்கின்றன. ஒன்ராறியோ, கியூபெக், நியூபிறின்ஸ்விக், நோவஸ்கோரியா, பிறின்ஸ் எட்வேட், ஐலண்ட் போன்ற கனேடிய பிரதேசங்களில் தூயதொழில் நுட்பம் பற்றிய விரிவாக்க சேவைகள் (Extension Services) செறிவாக நடத்தப்படுகின்றது.

### தொழில்நுட்ப அணு

தொழில் நுட்ப அணுகுமுறைஎன்பது தூயதொழில் நுட்பம் நடைமுறைப் படுத்தப்படுமிடத்து வெளியேறும் திண்ம-திரவ கழிவு நீர் தரம் பற்றிய கருத்துக்களை நிலைப்படுத்தல் ஆகும் குறிப்பாக மாசுபட்ட நீர் அல்லது கழிவு பரிகரணம் என்பதனை உள்ளடக்கும். கழிவு நீரின் நிறம், வெப்பநிலை. கலங்கல் நிலை, மணம் போன்ற பௌதிக காரணிகள் ஆராயப்பட்டு தரம் கட்டுப்படுத்தப்படுகிறது இரசாயண பரிகரணம் என்பது திண்மக்கழிவு, உயிர் வாழ்வதற்கான ஒட்சிசன் தேவை (BOD). இரசாயன ஒட்சியேற்றும் திறன் (COD) போன்றவற்றை உள்ளடக்கும்.

BOD என்பது ஒரு நாளுக்கு 1 லீற்றர் கழிவு நீரில் இருக்கக்கூடிய ஒட்சிசனின் மில்லிக்கிராம் அளவு இது 25°C இல் 5 நாட்களுக்கு தேவையான ஒட்சிசன் அளவை தெரிந்து கொள்ள உதவும் COD என்பது பொட்டாசியம் பேர்மங்கனேற்று ($KMNO_4$) அல்லது பொட்டாசியம் குரோமேற்று ($KCrO_4$) இன் தேவையின் அளவைக் குறிக்கும். இதனை தெளிவாக்க பின்வருமாறு கூறமுடியும்.

| | BOD, mg/l | COD mg/l |
|---|---|---|
| வண்மையற்ற திரவக்கழிவு | < 200 | > 400 |
| இடை நிலை கழிவு | 350 | 700 |
| வன்மையான கழிவு | 500 | 1000 |
| மிகவும் வன்மையான கழிவு | > 750 | > 1500 |

உயிரியல் சோதனை என்பது கழிவு நீரிலுள்ள (Sewage) பக்ரீயா, பங்கசு, அல்கா, பரக்கசோவா அளவைக் கணிப்பிடல் இதன் அளவ தீர்மானிக்கப்படுவது BOD, COD. இன் பெறுமானத்தின் அடிப்படையிலேயே ஆகும்.

கழிவு நீரில் காணப்படும் பல வகைப்பட்ட கழிவுகளை அதாவது திண்ம கழிவுகள் உட்பட அகற்றப்படுத்து துரிதப்படுத்தப்படுவதனால்

(8 ம் பக்கம் பார்க்க)

## தூய தொழில் நுட்ப

( 7-ம் பக்கத் தொடர்ச்சி )

அதிலிருந்து வெளியேறும் மாசுகளை கட்டுப்படுத்த முடியும். இதற்கு பாவிக்கப்படும் பெரிய உபகரணங்களாவன

1; காற்றற்ற வடிகட்டி ( Anaerobic filters)
2. துளையிடப்பட்ட நார் மிசை வடிகட்டி (Hollow fibre ultra filtration)
3. மேலோட்ட காற்றற்ற கழிவு தடுப்பு (Up-flow anaerobic sludge b'anker)
4. ''Asmex'' எனப்படும் மென்தகட்டு தொழில் நுட்ப வடிகட்டி (Membrane complex filter)
5. காற்றற்ற திரவ அடிநிலைத் தாக்கி Anaerobic fluidiged bed reactor USBR
6. வளைய அதிஊதாக்கதிர்வீச்சுதாக்கி (Annular ultraviolet radiation reactor)
7. கீழோட்ட நிலையான படைதாக்கி (Down-flow starionery fixed filter reactor USFF)

நகரவாசிகளின் செறிவான வாழிடங்களில் ஏற்படும் கழிவு நீர் அகற்றப்படும் பொழுது பலவகையான பிரச்சனைகளை பொறியியலாளர்கள் எதிர்நோக்குகின்றனர். வலைபோல் அமையும் நிலக்கீழ் கழிவுநீர்க்குழாய்கள், அவற்றின் அமைவு ஆழம், குழாயின் பருமன், பரிசோதனைப் புள்ளிகள், கழிவு நீர் பாயும் தூர அளவு, அதன் அமுக்கம், அதில் சேரும் கரையா கழிவுகள், மிதக்கும் கழிவுகள், வெளியேறும் வாயுக் கழிவுகள், வாயு வெளியேறும் 'வெளியேற்றிகள்', இறுதியாக சென்றடையும்கடல் அல்லது முடிவிடம் போன்ற பல வகையான விடையங்களை ஆராய்ந்து கழிவு நீர்க்குழாய்கள் நிலத்தின் அடியில் அமைக்கப்படுகின்றன. பல வருடங்களுக்கு பாதிப்பு ஏற்படாத இக் கழிவுக்குழாய்கள் ஒழுங்காக அமைக்கப்படுவதனால் சூழல் மாசுபடல் மிக வெகுவாகக் குறைக்க முடியும். இதன் பிழையான அமைப்பில் ஏற்படும் வெடிப்புக்கள் (Leakage) காற்றில் மாசுகளைச் சேர்க்கும். அதாவது $SO_2$, CO, $O_3$ NOX, SPM இத்துடன்பல குளோரோ புளோறோ காபன்களும் (cfc) இயந்திர பாவனை வெளியேற்ற மாசுக்களாக கொள்ளப்படும் கழிவு நீர் மாசுக்களை பின்வருமாறு அளக்கப்படுகிறது.

1. நிறுத்தல் முறை - Gravimetric method இதனால் Spm அளக்கப்படும்
2. அமிலமய அளத்தல் முறை - $SO_2$ Acidimeriic method
3. சிதையா கீழ்ச் செந்நிற கதிர்ப்பு உறிஞ்சல் - CO Non,dispersive in fra red absorion
4. நீரற்ற அக்ரிடைன்முறை - $O^3$ Dehydro acridine method
5. அளவு காட்டிக் குழாய்முறை $NO_x$ Detecrion tube method

### முகாமைத்துவ அணுகல்

''கழிவுகள் சிக்கலப்படுத்தல்'' என்பதுடன் தொடர்புடைய முகாமைத்துவ அணுகுமுறை உள்ளீடுகள் மனிதவளம், சக்தி என்ற மூன்று பதங்களின் கையாளலைக் குறிக்கின்றது இங்கு விஞ்ஞான முகாமைத்துவ (Scientific management) தொழில் தரம் உயர்வாக பேணப்படுகின்றது. தூய தொழில் நுட்பத்துடன் தொடர்புடைய விடையங்களாக பின்வரும் நடைமுறைகளைக் கொள்ளலாம்.

1. தூய தொழில் நுட்ப கருத்தை அறிதலும் ஏற்றுக்கொள்ளலும்.
2. சக்தி, நீர், மூலப் பொருட்களைச் சேமித்தல்
3. நிறுவனத்தின் சீரான வளர்ச்சியை நிலைப்படுத்தல்
4. தனியாளரின் புதுக்கண்டுபிடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
5. மேலதிக அபிவிருத்திக்கான பண முதலீட்டு ஒதுக்கல்
6. உள்ளும் புறமும் சுமுகமான நிலைகளைப் பேணும் தொழில் நுட்ப உயர்ச்சியில் நிறுவனங்களைக் கையாளல்.

### நிர்வாக அணுகல்

இது தூய தொழில் நுட்பத்தை திணித்தலில் ஏற்படும் சட்டவாக்கங்களை நாடளாவிய நீதியில் ஏற்றுக் கொள்ளச் செய்தலில் முக்கிய பங்களிக்கின்றது. அதாவது கொள்கை திட்டமிடல் தூய தொழில் நுட்ப ஆற்றலுள்ள பொறியியல் சூழலியலாளர்கள் பங்களிப்புச் செய்தல்; இதனை நடைமுறைப்படுத்தும் நோக்குடனும் ''சட்ட சூழலுக்கு'' (Legal Environment) முக்கியத்துவம் கொடுத்தல் சில செயல்முறைகளை கீழே குறிப்பிடலாம்,

1. சூழல் மாசுபடல் தொடர்பான அரசாங்க சட்டமும் கொள்கையும் மறுபரிசீலனை செய்து, தூய தொழில் நுட்பத்திற்கு முதன்மை நிலை அளித்தல்
2. பொறியியல் சூழலியலாளர்கள் கொள்கை திட்டமிடல் பங்கு கொள்ளல்
3. கைத்தொழில் சேவை கழிவு முகாமைத்துவ நிறுவனங்களை ஒவ்வொரு நகரத்திலும் திறத்தல்.
4. அரசுடன் சேர்ந்த தனியார் நிறுவனமும் கழிவு முகாமைத்துவத்தில் பங்களிப்புச் செய்தல்
5. தூய தொழில்நுட்ப அறிவுடைய தொழில் நுட்பவியலாளர்களை ஊக்குவித்தல்
6. தூயதொழில்நுட்பவிரிவாக்க நிலையங்கள் அமைத்தல்?
7. தூய தொழில் நுட்பத்துக்கான ஆய்வுகூட வசதிகள் பிரதேச மட்டத்தில் அமைத்தல்
8. திட்டமிட்ட இயந்திர விற்பனைநிலையங்களை அமைத்தல்
9. வழிகோல்இயந்திர (Pilot Plant) வடிவமைப்புச் செய்தல்
10. தூயதொழில் நுட்பதுண்டுப்பிரசுரங்களை தொடர்ந்து வெளியிடல்

கைத்தொழில், குசினி என்பவற்றின் தரைமேல் கழிவுகள், திண்ம திரவ தரைக்கீழ்க் கழிவுகள் இரண்டும் பரிகரணம் செய்யப்பட்டு மக்களுக்கு இமையற்ற நிலையில் வெளியிடப்படவேண்டியதும், இது பற்றிய கருத்துக்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளும் பாதுகாப்பான சூழல் Safety environment) பொருந்திய சமூக அமைப்புக்கு வழிவகுக்கும். இதனை அடைய தூயதொழில்நுட்பம் சிறந்த ஒரு வழியாகும் தூய தொழில் நுட்பம் என்பது சிறப்பான உற்பத்தி நவீன உற்பத்தி, உற்பத்தியை மாற்றி அமைத்தல் போன்றவற்றுடன் பின்னிப்பிணைந்து சக்தி - மனிதவளம் உள்ளீடுகள் என்ற உற்பத்திக்காரணிகளிலிருந்து வெளிவரும் சிறப்பான உற்பத்திகளை தர நிர்ணயம் செய்வதுடன் கழிவு முகாமைத்துவத்தை அடக்கும் விஞ்ஞான முகாமைத்துவம் ஆகும் தூய தொழில் நுட்பம் பற்றிய விஞ்ஞான முகாமைத்துவ அறிவு வளர நாம் எல்லோரும் வழி செய்வோமாக.

# பொது அறிவு - GENERALKNOWLEDGE

### அறிவியல் துறைகளின் தந்தையர்கள்

| | | |
|---|---|---|
| கணக்கியலின் தந்தை | | லூக்கா பெகியோலி |
| கணனிகளின் தந்தை | - | சாளஸ்பபேஜ் |
| மின்சாரத்தின் தந்தை | - | மைக்கல்ஃபாரடே |
| அரசியலின் தந்தை | - | அரிஸ்டோட்டில் |
| சமூகவியலின் தந்தை | - | மக்ஸ்வெபர்ஹொம் |

### நாடுகளும் செய்தி நிறுவனங்களும்

| நாடுகள் | | செய்தி நிறுவனங்கள் |
|---|---|---|
| சிறீலங்கா | - | லங்காபுவத் |
| ஐக்கிய அமெரிக்கா | - | ரொய்ட்டர் |
| ஜப்பான் | - | கியாடோ |
| சீனா | - | சிங்குவா |
| ரஷ்யா | - | இதாஸ்டாஸ் |
| ஈரான் | - | இர்னா |
| இந்தியா | - | PTI |

### தேசிய விளையாட்டுக்கள்

| | | |
|---|---|---|
| இலங்கை | - | எல்லை |
| இந்தியா | - | ஹாக்கி, கபடி |
| அமெரிக்கஐக்கியநாடுகள் | - | பேஸ்பால் |
| கனடா | - | ஹக்கி |
| ஸ்பெயின் | - | ஜல்லிக்கட்டு |
| ஜப்பான் | - | கராத்தே ஜுடோ |
| ஸ்கொட்லாந்து | - | கால்பந்து |
| அவுஸ்திரேலியா | - | கிரிக்கெட் |
| பாகிஸ்தான் | - | ஹக்கி |
| துருக்கி | - | மல்யுத்தம் |

### நாடுகளும் சிறப்புப் பெயர்களும்

| சிறப்புப் பெயர் | | நாடுகள் |
|---|---|---|
| நள்ளிரவுச்சூரிய உதயநாடு | - | நோர்வே |
| சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| நைல்நதியின் கொடை | - | எகிப்து |
| ஆயிரம் வாவிகள் நாடு | - | பின்லாந்து |
| உலகத்தின் கூரை | - | திபெத் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சலாந்து |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| புனிதநாடு | - | பலஸ்தீனம் |
| தங்கப் போர்வை நாடு | - | அவுஸ்ரேலியா |
| மரகதத்தீவு | - | அயர்லாந்து |
| பொற்கோபுர நாடு | - | மியன்மா (பர்மா) |
| சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |
| இருண்டகண்டம் | - | ஆபிரிக்கா |
| ஐரோப்பாவின் காப்பாகம் | - | பெல்ஜியம் |
| ஏழு மலைகள் கூடிய நகரம் | - | உரோமாபுரி |
| ஈடனின் தோட்டம் | - | இலங்கை |
| உலகின் சர்க்கரைக்கிண்ணம் | - | கியூபா |

### விண்வெளி ஆய்வு சம்பந்தமானது

☆ உலகின் முதல் செய்தி பரிமாற்ற கோள்எது?
எகோ - 1 இது 196 ல் விண்ணுக்கு ஏவப்பட்டது

☆ சூரியனில் அதிகமாக உள்ள வாயுக்கள் -
ஹைட்ரஜன், ஹீலியம் எனும்வாயுக்களாகும்

☆ சந்திரத்தரையில் முதன் முதலில் பிரயாணம் செய்த வாகனம் எது?
சோவியத்இரசியாவின் லூனா கோட் எனும் வாகனம்

☆ வோல்கா எனும் வால் வெள்ளியைக் கண்டு பிடித்தவர் யார்?
எடமன்ட் ஹேல்

☆ சூரியன் பூமியைவிட எத்தனைமடங்கு ஈர்ப்புச் சக்தியுடையது?
28 மடங்கு

☆ விண்வெளியில் நீண்ட நாட்கள் மிதந்தவர் யார்?
பஜ் ஆல் பிரிஸ் எனும் அமெரிக்கர்

☆ மிதக்கும் விண்வெளிக் கூடத்தைமுதலில் அமைத்தவர் -
ரசியர்கள் அதன் பெயர் சல்யூட் ஆய்வுக் கூடம்

☆ சந்திரனை அடைந்த முதல் ஆய்வு சேர்க்கைக் கோள் லுனிக் 11

☆ ஸ்கைலப் எந்த நாட்டு ஆய்வுகூடம் அது எங்கே வீழ்ந்து நொருங்கியது?
அமெரிக்காவின் ஆய்வு கூடம் அவுஸ்திரேலியவின் மேற்கு பாலைவனப் பகுதியில் வீழ்ந்தது

☆ விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் யார்? இவர் எத்தனையாவது விண்வெளி மனிதர்?
ராகேஸ் சர்மா 133வது மனிதர்

☆ பூமியை ஒரு முறை சுற்றிவர யூரிககாரினுக்கு எடுத்த நேரம் எவ்வளவு? 108 நிமிடம்

☆ சந்திரனிலிருந்து முதன்முதலில் மனிதன் இல்லாமல் மண் கொண்டு வந்த விண்கலம் யாது?
லூனா - 16, ரசிஸ்சியாவினதாகும்

☆ செவ்வாய்க் கிரகத்தில் இறங்கிய முதல் விண்கலம் வைகிங் விண்கலம் ஆகும்

☆ உலகின் முதல் விமானத்தின் பெயர் என்ன? விமானிகள் யார்?
பிளயர் - 1, வில்பரைட் ஒவில்ரைட் (1913-02 17)

☆ உலக விண்வெளி தினம் வருடத்தில் எப்போது நினைவு கூறப்படுகின்றது ஏன்?
ஏப்பிரல் 12 ல் (1961 4 - 12) முதன் முதலில் யூரிகாரின் விண்வெளியை சென்றடைந்த முதல் விண்வெளிமனிதன்

### வினோத உயிரினங்கள்

☆ ஞாபக சக்தி கூடிய விலங்கு - யானை

☆ அதிக நீர் அருந்தும் பறவை - புறா

☆ மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன் சிட்டு

☆ சத்தமிடாத விலங்கு - ஒட்டகச் சிவிங்கி

☆ பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு

☆ நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினங்கள் நண்டு, இறால்

☆ கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவையினம் பென்குயின்

☆ பறக்கும் போதே தூங்கும்பறவை - ஆல்பட்றாஸ்

## பாதீட்டுக்கட்டுப்பாடு

2ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பாதீடுகள் நிறுவனத்தின் உயர் முகாமையால் அங்கீகரிக்கப்பட்டு இருப்பதுடன் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் நிறுவனத்தால் செய்யப்பட வேண்டிய நோக்கெல்லையாகவும் விளங்குகின்றது.

மேலே கூறப்பட்ட இருவகையான பாதீடுகளையும் விடப் பின்வரும் பாதீடுகளும் காணப்படுகின்றன;

### நிலையான பாதீடு : ( Fixcd Budget )

விற்பனை உற்பத்தி மட்டத்திலேற்படும் மாற்றத்திற்கமைய ஏற்படக் கூடிய மாற்றங்களை கவனத்தில் கொள்ளாது தயாரிக்கப்படும் பாதீடு நிலையான பாதீடு எனப்படும்.

### நெகிழும் பாதீடு ( Flexible Budget )

செயல்பாட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப ஏற்படும். மாற்றங்களை பிரதிபலிக்கத்தக்கதாக தயாரிக்கப்படும் பாதீடு நெகிழும் பாதீடாகும்.

### பாதீட்டுக் கட்டுபாடு ( Budgetary Control )

பாதீட்டு கட்டுப்பாடு என்பது நிறுவனத்தின் இலக்குகளை நிர்ணயித்தல், கொள்கைகளை விபரமான திட்ட வடிவில் வெளிப்படுத்துதல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பவற்றின் பொருட்டு பாதீட்டு விளைவுகளை உண்மை விளைவுகளுடன் ஒப்பீடு செய்தல், பகுப்பாய்வு செய்தல், கட்டுப்படுதல் எனப்படுகின்றது இவ்வகையில் பாதீட்டுக் கட்டுப்பாட்டுச் செய்முறையை பின்வருமாறு காட்டலாம்.

திட்டமிடல் ( Plannihg )

↙

ஒருங்கிணைத்தல் ( Co-ordination )

↙

கட்டுப்பாடு ( Control )

### பாதீட்டுக்கட்டுப்பாட்டுபடி முறைகள் ( Steps in Budgeary Control )

பாதீட்டுத் தயாரிப்பில் மற்றும் அதன் செயலாக்கம் தொடர்பான சில படிமுறைகளே பாதீட்டுக் கட்டுப்பாட்டுப் படிமுறைகள் எனக் கொள்ளப்படுகின்றது.

1 ஒரு நிறுவனத்தில் காணத்தக்க அனைத்துப் பிரிவுகளுக்குமென பாதீடுகள் தனித்தனி அமைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு முழு நிறுவனத்துக்குமான ஒரு பாதீட்டை பிரதான பாதீடு தயாரித்தல். இது திட்டமிட்டமுன் கூட்டியே எதிர்வு செய்யப்பட்ட இலாப நட்டக் கணக்கினையும் ஐந்தொகையினையும் கொண்டிருக்கும்.

2. உண்மைச் செயற்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து அதனைப் பதிவு செய்து கொள்ளல் விலகல்களை சரிவரக் கண்டு கொள்ள இது அவசியமாகின்றது.

3. விலகல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து நோக்கத்தை அடைவதனை உறுதி செய்தல்

### பாதீட்டுக்கட்டுப்பாட்டின் நன்மைகள் ( The advantages of Budgeary Control )

எதிர்காலத்தில் எதிர்வு கூறி அதன்படி பாதீடுகளை அமைத்து செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் என்பது ஒரு கருமமாகக் கொள்ளப்படும் இந்த வகையிலேயே பாதீட்டுக்கட்டுப்பாடு என்பது முக்கியத்துவம் பெறுகின்றது பாதீட்டுக் கட்டுப்பாட்டின் மூலம் ஒரு நிறுவனம் பின்வரும் நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது

1. நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளினதும் தலைவர்கள் இப்பாதீட்டுத் தயாரிப்பு மூலம் இணைக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரினதும் ஆலோசனைகள் ஒன்றிணைக்கப்படுகின்றது.

2 நிறுவனத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிற்கு தேவையான போதியளவு தொழிற்பாட்டு மூலதனத்தை ஏனைய மூலவளங்களையும் கிடைப்பதனை நிச்சய படுத்துகின்றது

3. நிறுவனக் கட்டுப்பாட்டை மையப்படுத்தும் அதே வேளை கடமைகளை ஒவ்வொருமுகாமையாளருக்கு பகிர்ந்தளிக்கும் பொருட்டு நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கின்றது

4. உயர்வான இலாபகரத்தன்மையை நிறுவனம் அடையும் பொருட்டு செலவுகளையும் வருமானங்களையும் திட்டமிட்டு கட்டுப்படுத்தும் அதே வேளை முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.

5 இலாபகரமான செயற்திட்டங்களில் மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்கான வழியைக் காண்பிக்கிறது.

6. வீண்விரையங்களையும், நட்டங்களையும் குறைத்து இயந்திர சாதனங்கள், மூலப்பொருள்கள் தொழிலாளர்கள் போன்றவற்றின் உற்பத்தி வினையாற்றலை உயர்வாக்குகின்றது.

7. உண்மை முடிவுகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு அளவு கோலாகத் தொழிற்படுகின்றது

8. காலதாமதம் எதுவும் இன்றி எவ்வகையான பாதகமான நிலைமைகளுக்கும் உடனடியாகத்தீர்வுகாண வேண்டும் என்பது தொடர்பான விபரத்தை முகாமைக்கு இது வழங்கும்?

### பூச்சிய அடிப்படைப்பாதீடு : Zero Base Budgeting ;

பூச்சிய அடிப்படை பாதீடு என்ற நுட்பம் 1970 ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் பீற்றர் ஏபிர் என்பவரால் முன்வைக்கப்பட்டது ஒவ்வொருவரிடமும் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிற்பாடுகளுக்கான செலவினங்கள் ஆகியன பூச்சிய மட்டத்திலிருந்து மீள மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதே இதன் அடிப்படை எண்ணக்கருவாகும். இந்நுட்பம் தனியார் துறையிலும் அரசதுறையிலும் பின்பற்றப்படலாம் இது பூச்சிய மட்டத்திலிருந்து மீள மதிப்பிடப்படும். இப்பாதீடு தயாரிக்கப்படும் போது அதில் உள்ளடங்கும் அம்சங்கள் இடம்பெறுவதன் அவசியம், வேறு மாற்றும் வழிகள், அவை ஏற்படுத்துவதன் நியாயம் என்பன கருதிற் கொள்ளப்பட்டு அது தொடர்பான செலவு விபரங்கள் பாதீட்டில் உள்ளடக்கப்படும். இதன் முக்கி தன்மையானது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக திட்டமிடலுக்கு இது உதவுகிறது

### காசுப்பாதீடு Cash budget :

காசுப்பாதீடானது ஒரு பாதீட்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட காசு உட்பாய்ச்சலையும், காசு வெளிப்பாய்ச்சலையும் காட்டும் இந்த வகையில் காசுப்பாதீடு என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம். குறித்த நிறுவனமொன்று

(11ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாணய சங்கங்களின் தோற்றமும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாணய சங்கம் உருவாக்கி பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளி லும் படிப்படியாக ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு செயலாற்றிவந்தன.

1911ம் ஆண்டு முதல் 1921ம் ஆண்டு வரை இலங்கையில் ஐக்கிய நாணயசங்கங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டு வந்தன. அதாவது நிதிகளைத் திரட்டி உறுப்பினர் களுக்கு கடன் வழங்கும் சேவையினை நோக்கமாகக் கொண்ட ஐக்கிய நாணய சங்கங்கள் மட்டுமே செயற் படலாயின. நபர்களை அங்கத்தவர் களாகக் கொண்ட '' முதனிலைச் சங்கங்கள் '' அல்லது ஆரம்ப சங்கங் கள் மட்டுமே பதிவுபெற சட்டத்தில் ஏற்பாடு இருந்தது.

இத்தகைய ஐக்கிய நாணயசங் கள் என்ற அமைப்பபின் நோக்கங் கள் ஆவன.

1. அங்கத்தவர்களுக்கு வருவாயை ஈட்டக் கூடிய முயற்சிகளில் ஈடு படுவதற்கான கடன் உதவிகளை வழங்கல்
2. குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல்
3. இலகுவான பிணையுடன் (இரு உறுப்பினர்களின் ஆள்பிணையு டன்) கடன் வழங்குதல்
4. உறுப்பினர்களுக்கு கடன்கள் தேவைப்படும் நேரத்தில் உரிய கடன் உதவிகளை வழங்குதல்
5. கடன் மீளப்பெறுவதில் இலகு வான நடைமுறைகளை பின்பற் றுதல்
6. பகுதி பகுதியாக கடன்களை மீளளிக்க சந்தர்ப்பம் அளித்தல்
7. வருவாய் பெறும் காலத்தில் ஒரு சிறு தொகையினையாவது சேமிக்கத் தூண்டுதல்
8. உறுப்பினர்களிடையே கூட்டு முயற்சி மனப்பாங்கை வளர்த் தல் அதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தின் அனுகூலங்களை புரியவைத்தல்

(வளரும்)

---

## பாதிட்டுக் ..

( 10 பக்கத் தொடர்ச்சி )

குறித்தவொரு எதிர்காலப்பகுதியில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப் படும் பணத்தொகையும் அக்காலப் பகுதியில் கொடுக்கப்படும் என எதிர் பார்க்கப்படும் தொகையையும் தொகுத்துத் தயார் செய்யப்படும் ஒரு அறிக்கையையே '' காசுப்பாதிடு '' எனப்படும். சுருக்கமாகக்கூறின் எதிர் காலப் பகுதியொன்றுக்கான காசுப் பெறுவனவுகளையும் காசுக் கொடுப் பனவுகளையும் வெளிப்படுத்திக்காட் டும் ஒரு அறிக்கையே காசுப்பாதிடு எனலாம். வருடாந்த காசுப்பாதிடா னது வாராந்தம் அல்லது மாதாந் தம் அல்லது காலாண்டு அடிப்படை யில் தயாரிக்கப்படலாம்.

காசுப்பாதீட்டில் காசுப்பற்றாக் குறை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் என்று தெரிந்தால் நிறுவ னம் தனது செயல்பாடுகள் சில வற்றை செய்யாமல் விடலாம், அல் லது கடன் பெறுவதன் மூலம் அல்லது மேலதிகப்பற்று மூலம் காசைப் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட லாம். காசு மேலதிக்கம் ஏற்படுமென தெரியவரின் சாத்தியமான முதலீட் டின் ஈடு செய்யலாம்.

### காசுப் பாதிட்டில்உள்ளடக்கப்படும் விடயங்கள்

1. எதிர்பார்க்கப்படும் காசுப் பெறு வனவுகள் ;

இதில் பின்வரும் விடையங்கள் உள்ளடங்குகின்றன அவையாவன எதிர்பார்க்கப்படும் காசுப்பெறுவனவு கள், கடன்பட்டோரிடமிருந்துபெற்ற காசு, காசு விற்பனைகள், பெற்ற கடன்கள், பங்கு தொகுதிக்கடன் வழங்கல் மூலம் பெற்றது ஆகிய வற்றை கூட்ட வருவது மொத்தக் காசுக்கிடைப்பனவு

2. எதிர்பார்க்கப்படும் காசுக் கொடுப்பனவுகள் :

பின்வரும் விடையங்கள் உள்ள டங்கும். அவையாவன ;

கடன் கொடுத்தோருக்கு கொடுக்க வேண்டிய காசு, காசுக்கொள்வனவு, செலவு சம்பந்தமான கொடுப்பனவு கடன் மீளளிப்பு மூலதன செலவினங் கள், பங்குலாபங்கள், வரிக் கொடுப் பனவுகள் உள்ளடங்குகின்றது இவற் றின் கூட்டு மொத்தம் மொத்தக் காசுக் கொடுப்பனவு எனப்படும்.

ஆரம்ப காசு மீதியுடன் மொத் தக் காசுப் பெறுவனவுகளைக் கூட்டி அதனுடன் மொத்தக் காசுக் கொடுப் பனவுகளைக் கழிக்க வருவது இறுதிக் காசு மீதியாகும். இவ்வாறு காசுப் பாதீடு தயாரிக்கப்படுகின்றது.

### வரவேற்கிறோம்.

கூட்டுறவாளர்கள், எழுத்தாளர் களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை பொது அறிவு விடயங்களை எதிர் பார்க்கின்றோம். எழுதும் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி,

ஆசிரியர் ஐக்கியதீபம்<br>
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை,<br>
வீரசிங்கம் மண்டபம் 1ம் மாடி,<br>
இல 12, காங்கேசன்துறை வீதி,<br>
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## பரீட்சை முடிவுகள்

கடந்த யூன் மாதம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரியினால் நடாத்தப் பட்ட கூட்டுறவுப் பணியாளர்; தரா தரப்பத்திர சாதாரணதர இறுதிப் பரீட்சையில் யாழ்ப்பாணம் கூட்டுற வுப் பயிச்சிக் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில் இருவர் 2ம் பிரிவிலும் 10 பேர் மூன்றாம் பிரிவி லும் சித்தியடைந்துள்ளார்கள்.

க. சுபாஜினி, பொ. தெய்வேந் திரம் ஆகிய இருவரும், இரண்டாம் பிரிவிலும், த. அஜந்தகௌரி, சி அருள்பாலன், அ. அலன், க. அருட்செல்வம், இ. உதயகுமார் சீ. உருத்திராபதி, த. கலையரசி, ந. ஸ்ரீநடராஜன் சி தயாபரன் ஆகி யோர் மூன்றாம் பிரிவிலும் சித்தி யடைந்துள்ளார்கள்.

---

### காவியங்களும் கவிஞர்களும்

மணிமேகலை - கூலவாணிகன் சாத்தனார்<br>
சீவகசிந்தாமணி - திருத்தக்க தேவர்<br>
சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்<br>
குண்டலகேசி - நாதகுத்தனார்<br>
இராமகாதை - கம்பர்<br>
இலியிட் ஒடிசி - ஹோமர்<br>
ஷாநாமா - பிர்தவுஸி<br>
சகுந்தலம் மேகதூதம் - காளிதாசர்<br>
கீதாஞ்சலி - ரவீந்திரநாத் தாகூர்<br>
யேசுகாவியம் - கவிஞர் கண்ணதாசன்

கே எஸ் நிதி

Registered as a News paper at the G. P. O
Sri Lanka Under / No K. V. J. 59 / 87

ஐக்கியதீபம்

ஐப்பசி - 2000

# எட்டாவது ஆண்டில் கூட்டுறவாளனை நினைவு கூருகின்றோம்!

''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' என்ற மூதுமொழிக்கமைய கூட்டுறவு இயக்கத்தினூடாக மக்களுடன் கூடி வாழ்ந்து தமிழ்ப் பகுதிகளின் கூட்டுறவு வளர்ச்சியில் தனக்கென தனியிடம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார் அமரர் செல்வரட்ணம்.



கூட்டுறவின் ஜனநாயகப் பண்புகளை சாதாரண மக்களிடையே வேரூன்றச் செய்வதற்கு கூட்டுறவுக் கல்வி தொடர்பான பயிற்சித் திட்டங்களை உருவாக்கி அதற்குரிய பிரச்சார உத்திகளைக் கையாண்டு கூட்டுறவுக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பினார்.

1963ல் அரச சேவை (கூட்டுறவு) யில் இருந்து இளைப்பாறியபின் ''வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின்'' பிரதம விகிதராகப் பதவி ஏற்று அதன் பின் அச்சபையின் நிர்வாகச் செயலாளராகவும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகவும் கடமையாற்றினார் கூட்டுறவு இயக்கம் புனரமைக்கப்பட்ட பின்பு தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ். மாவட்ட செயலாளராகவும் தொடர்ந்து சேவை ஆற்றி, கூட்டுறவாளர்களின் உழைப்பின் சின்னமாக விளங்கும் வீரசிங்கம் மண்டபத்தையும் அதனுடன் இணைந்த மேல்மாடிக் கட்டிடத்தையும் உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் தலைவராக இருந்த போது சாதாரணமக்களிடையே சிக்கனம், சேமிப்புப்பழக்கத்தை ஏற்படுத்திய அமரர் நாடகத்துறை, கல்வித்துறை, விவசாயத்துறை, போன்ற பல்வேறுசமூகசேவைத்துறைகளில் தன்னை ஈடுபடுத்தி அதற்குரிய துறைசார் அறிஞர்களுடன் இணைந்து பல அமைப்புக்களை உருவாக்கி செயற்பட்டதுடன் அத்துறைகளிலும் கூட்டுறவு அம்சங்களான சமுதாய நீதி, ஜனநாயகப்பண்புகள் பரஸ்பர உதவி ஆகியவற்றைப்புகுத்தி அதில் வெற்றி கண்டார்.

இத்தகைய பண்புகள், சேவைகள் மிக்க பெரியார் அமரர் செல்வரட்ணத்தை கூட்டுறவாளர்களும் மற்றையோர்களும் நினைவுகூர்வதில் பெருமையடைவோமாக!

பெ. கனகசபாபதி

## வாழையடி வாழை

பூக்களிலே வாழைப்பூ
பூசிக்கும் பூவல்ல
புசிக்கும் பூ
ஆடவர்க்கும் பெண்டிர்க்கும்
பொதுவாகப் பூக்கும் பூ
வள்ளல்களை விஞ்சுகின்ற
வாழை இந்த வாழை
குமணன் தன் தலையை
கொடுப்பதாய்த் தான் சொன்னான்
இதுவோ...
குலையெனும் தலையை
கொடுத்தே விடுகிறது
வாழை இல்லாமல்
பண்டிகை வருவதில்லை
ஒன்று
இலையிருக்கும் காயிருக்கும்
இல்லை பழமிருக்கும்
பண்டிகை நாட்களிலே
மாடிகளில் மட்டுமல்ல
ஏழைகளின் குடிசையிலும்
இரண்டு பழமேனும்
ஊதுவத்தி உட்கார்ந்து
செங்கோலோச்சி கொண்டேயிருக்கும்
கல்யாண வீட்டை கண்டு பிடிப்பதற்கு
வாழை தான் இங்கே வசதியான முகவரி
இது .....
நிழல் தராத் தரு வென்று
நீங்கள் நினைக்கலாம்
நிழல் கிடைத்தால் மனித இனம்
நிச்சயமாய் உறங்கிவிடும்
என்பதால்...
தன் பச்சிலையை மடக்கி
எச்சரிக்கையாய் நிற்கிறது!

ஆக்கம்: சி. தயாநிதி
(கட் நெல். ப. நோ. கூ. சங்கம்)

### நாடுகளைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்
### அவுஸ்திரேலியா

| | |
|---|---|
| தலைநகரம் | - கான்பெரா |
| பரப்பு | - 7,682,300 சதுரகி மீ |
| சனத்தொகை | - 18 மில்லியன் |
| எழுத்தறிவு | - 99% |
| தலாவருமானம் | - 19.100 S |
| ஆயுட்காலம் | - 77 வயது |
| நாணயம் | - டொலர் |
| வாழும் மக்கள் | - ஆங்கிலேயர், ஆதிக்குடிகள் |
| மொழி | - ஆங்கிலம் |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| உற்பத்திகள் | - கோதுமை, பாற் பொருட்கள் |

அவுஸ்திரேலியா பாரளுமன்ற ஆட்சி நடைபெறும் ஒரு ஜனநாயக நாடு. இங்கு வாழும் மக்கள் பிரித்தானியாவில் இருந்து 1788ம் ஆண்டில் வந்து குடியேறியவர்களாவர். தங்கம் கொழிக்கும் இம் இந்நாட்டில் கல்விக்காக பெருந்தொகையான பணம் செலவிடப்படுகிறது. 19 பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 1ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2000ம் ஆண்டு ஐப்பசி மாதம் வெளியிடப்பட்டது.